நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 340/2022**

**P.W. 4 -ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சீரங்கன் |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | காவேரி கிராஸ் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 4** |
| வயது | : | 65 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025-ஆம் வருடம், ஜுலை மாதம், 22-ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:-01.41PM. )

1. நான் தற்போது காவேரி கிராஸில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள்.அதில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. (**என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான்.( கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 2 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.)**போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1. இறந்து போன கோபால் எனக்கு உறவினர் என்றால் இல்லை. 03.03.2022 ம்தேதி மாலை 6.30 மணி அளவில் கோபால் பால் வாங்குவதற்காக காவேரி கிராஸ் அருகே நடந்து சைக்கிளை தள்ளி சென்றபோது அவரருக்கு பின்னால் அதி வேகமாக மகேந்திரா பிக்கப் வண்டியை இந்த வழக்கின் எதிரி ஓட்டி வந்து கோபால் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாக கேள்விபட்டேன் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் 04.03.2022 ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவஇடம் வந்தபோது அங்கிருந்த மோகன்ராஜ் மற்றும் என் முனபாக படம் வரைந்து எழுதி படித்து காண்பித்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**வேமறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.52PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**